முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான 146 நூலகக் கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, கள்ளக்குறிச்சி நகரில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட மைய நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தில் புதிய வீடு கட்ட ஆணை!

"நான் முதல்வன்" பயனாளி பிரேமாவின் கனவை நனவாக்கிய முதல்வர்!

சமூக வலைதளத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பதிவு!

சென்னை, செப். 27-

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" விழாவில் "நான் முதல்வன்" திட்ட பயனாளி பிரேமாவின் கனவை நனவாக்கிடும் வகையில் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்ட ஆணை வழங்கியது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஒழுகும் வீட்டில் அப்பா இருப்பாரே என்ற கவலை பிரேமாவுக்கு இனி வேண்டாம்!

எத்தனையோ பேரின் எதிர்ப்பையும் மீறி உங்களைப் படிக்க வைத்த தந்தையிடம், முதல் மாதச் சம்பளத்தைத் தந்து நீங்கள் மகிழ்ச்சி அடைந்தீர்கள்!

உங்கள் கனவை நிறைவேற்றிய தந்தைக்குக் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையை வழங்கி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு 'எஸ்.வி.வெங்கடராமன் தெரு' !

நுங்கம்பாக்கம் கல்லூரிப் பாதைக்கு 'ஜெய்சங்கர் சாலை' - பெயர்ப் பலகைகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்!

சென்னை, செப். 27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் வசித்து வந்த நுங்கம்பாக்கம், கல்லூரி பாதைக்கு "ஜெய்சங்கர் சாலை" என்றும், நாடக நடிகர், தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர், அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த எஸ். வி. வெங்கடராமன் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு "எஸ்.வி. வெங்கடராமன் தெரு" என்றும், புதிய பெயர் சூட்டப்பட்ட சாலைகளின் பெயர் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

ஜெய்சங்கர் சாலை

மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் 35 ஆண்டு காலத்திற்கு மேலாக தமிழ் சினிமாவில் பிரபல நடிகராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய அவர் பல்வேறு தொண்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதோடு, கலைமாமணி விருது பெற்ற பெருமைக்குரியவர் ஆவார். அவரது கலைச்சேவையை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த நுங்கம்பாக்கத்திலுள்ள கல்லூரி பாதையை (College Lane) "ஜெய்சங்கர் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

எஸ்.வி. வெங்கடராமன் தெரு

மயிலாப்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி. சேகர் தந்தை எஸ். வி. வெங்கடராமன், விஜயா வாஹினி ஸ்டுடியோவில் லேப் உயரதிகாரியாக பணியாற்றினார். மேடை நாடகங்களில் பெண் வேடமிட்டு நடித்துள்ளதோடு, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரிகளில் தற்காலிக பேராசிரியாக பணியாற்றியுள்ளார். தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சித் தொடர் "வண்ணக்கோலங்கள்" தயாரிப்பாளர் ஆவார். அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த அவர் கண்தானம், ரத்த தானம், குழந்தைகளுக்கு ஏற்படும் சர்க்கரை குறைபாடு பற்றி விழிப்புணர்வு குறும்படத்தை தயாரித்ததோடு, தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும் பெற்றுள்ளார். அவரது சேவையை சிறப்பிக்கும் வகையில், அவர் வசித்த மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு "எஸ்.வி. வெங்கடராமன் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், அரசு உயர் அலுவலர்கள், நடிகர் ஜெய்சங்கர் மற்றும் எஸ்.வி. சேகர் ஆகியோரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் எஸ். மதன் மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 219 வது நாள்

திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 219 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (26.09.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71 அ, ஈடன் கார்டன், பெரம்பூர். 2) வட்டம் 74, ஏகாங்கிபுரம் (டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். தமிம், பொல்லு டி.சுரேஷ் குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் 121வது பிறந்த நாள்!

சிலைக்கு - அமைச்சர் பெருமக்கள் இன்று மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, செப். 27-

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள காயாமொழி என்கிற கிராமத்தில் 27.09.1905 அன்று பிறந்தார். செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டில் சட்டப் படிப்பு முடித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கின்ற நாட்களிலேயே சிறு தொழில்கள் செய்து முன்னேறுவது குறித்து பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.

1942ஆம் ஆண்டு முதன்முதலாக 'மதுரை முரசு' என்ற வாரம் இருமுறை இதழையும், பின்னர் 'தமிழன்' என்ற வார இதழையும் தொடங்கினார். யாருக்கும் அஞ்சாமல் உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும் என்கிற கொள்கைப் பிடிப்பின் காரணமாக, இவரது பத்திரிகையை ஆங்கிலேய அரசு தடை செய்தும்கூட, இவர் தம் கொள்கையை மாற்றிக் கொள்ளா தவர்.

1942ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் மதுரையில் 'தினத்தந்தி' நாளிதழை வெளியிட்டார். தொடர்ந்து, 'மாலை மலர்' என்ற மாலைப் பத்திரிகையையும் 'ராணி' என்ற வார இதழையும் தொடங்கினார். 1947ஆம் ஆண்டில் 'தினத்தாள்' பத்திரிக்கையும், அடுத்த ஆண்டில் 'தினத்தூது' பத்திரிகையையும் தொடங்கினார். பத்திரிகைகளில் மக்கள் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் தமிழ்ச் சொற்கள், சிறிய வாக்கியங்கள், கவர்ந்திழுக்கும் தலைப்புகள், கருத்துப் படங்கள் உள்ளிட்ட உத்திகளைக் கையாண்டார்.

சி.பா.ஆதித்தனார் அவர்கள் தம் நாளிதழில் ஏராளமான படங்களுடன் செய்திகளை வெளியிட்டு தமிழ் இதழியல் துறையில் முத்திரை பதித்தார். 1942ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை தமிழக சட்டப்பேரவை மேலவை உறுப்பினராகவும், 1957ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் சட்ட மன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றினார். அப்போது, சட்டப்பேரவை விதிகள் ஆங்கிலத்தில் இருப்பது பொருத்தமாக இருக்காது என்பதை அறிந்து தமிழில் மொழிபெயர்த்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் 1969ல் கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றினார். தமிழ் மீதும், தமிழர் மீதும் மாறாப் பற்று கொண்டுதம்வாழ்நாள்முழுவதும் செயல்பட்டதனால், அனைவராலும் "தமிழர் தந்தை" என அன்போடு அழைக்கப்படுகிறார்.

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்கள் ஏடு நடத்துவோர்க்கும், எழுத்தாளர்களுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரின் பிறந்த நாளான இன்று (செப்டம்பர் 27ஆம் நாள்) அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டில் கொண்டாடப்படும் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் 121 ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாவட்டங்களில் அடங்கியுள்ள சட்டமன்றத் தொகுதிகள் - மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம்

தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டு, **திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு** என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அம்மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்களும் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

மாவட்டம்	மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகள்	மாவட்டப் பொறுப்பாளர்கள்
திருநெல்வேலி மேற்கு	அம்பாசமுத்திரம் ஆலங்குளம்	இரா. ஆவுடையப்பன்
திருநெல்வேலி கிழக்கு	நாங்குநேரி, இராதாபுரம்	ம. கிரகாம்பெல்

'அண்ணா அறிவாலயம்'
சென்னை 18
நாள்: 26.09.2025

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

"எளிய மக்களுக்கு உலக நடப்புகளைக் கொண்டு சென்ற தமிழ் இதழியலின் முன்னோடிகளில் ஒருவர் !
தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும் அமைச்சராகவும் அளப்பரிய சேவைகள் புரிந்துள்ள சி.பா.ஆதித்தனார் அவர்கள் ஆற்றிய நற்பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்"

– மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழர் தந்தை
சி.பா.ஆதித்தனார்
அவர்களின்
121ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்

தமிழர் தந்தை
சி.பா.ஆதித்தனார் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 27.9.2025, சனிக்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
இடம் : எழும்பூர், சென்னை

செ.ம.தொ.இ./1114/வரைகலை/2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009